O.S. No.9/2021

12.11.2025

**வா.சா.1**

**திரு தம்பி தேவேந்திரன்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நடராஜ பிள்ளையின் மனைவி கோமளத்தம்மாள், கோமளவள்ளி என்பது தவறு. வா.சா.ஆ.5, வா.சா.ஆ.6 பட்டுக்கோட்டை சார்பு நீதிமன்றதால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை என்றால் சரி. அதில் 8ம் பிரதிவாதியாக சிவானந்தம் சேர்கப்பட்டுள்ளார் என்றால் சரி. மேற்படி வழக்கில் நடராஜபிள்ளையின் மனைவி கோமளத்தம்மாள், மகன்கள் மோகன் (எ) மோகனசுந்தரம், சந்தானகிருஷ்ணன், சந்திரசேகரன், பத்மநாபன் ஆகியோருக்கு எதிராகவும் கலிபுல்லா, அவரது மனைவி கபரோஷாலி ஆகியோர் தரப்பினராகவும் சேர்க்கப்பட்டுள்ளார்கள். தாவா சொத்தில் 1 முதல் 4 பிரதிவாதிகள் மேற்படி வழக்கில் குடியிருப்பதாக நீதிமன்றம் வாயிலாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.12 17:33:31 +0530

ஒருதலைபட்சமாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 6, 7 பிரதிவாதிகள் வழக்கை நடத்தியுள்ளார்கள். 6, 7 பிரதிவாதிகள் கிரயம் பெற்ற கிரய சாசனம் பி.சா.ஆ.12 மற்றும் பி.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணங்கள்தான் இந்த வழக்கில் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.வ.எண் 100/1990 வழக்கில் 1 முதல் 7 பிரதிவாதிகள் வாதி ராஜகோபாலன் பல்லவராயருக்கு கிரய சாசனம் எழுதி கொடுக்க வேண்டுமெனவும் தாவா சொத்துக்களை வசம் ஒப்படைக்க வேண்டும் எனவும் தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புரை பிறப்பித்தார்கள் என்றால் சரி. 8 ம் பிரதிவாதியின் மைத்துனர் ராஜகோபாலன் பல்லவராயர் என்றால் இல்லை. அந்த வழக்கில் 1 முதல் 7 பிரதிவாதிகளின் அனுபவத்தில் தாவா சொத்து உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறு. மேற்படி வழக்கில் சிவானந்தம் தாவா சொத்து தனக்கு சொந்தம் என்பது குறித்து எந்தவித பரிகாரமும் கோரவில்லை என்றால் தவறு. சிவானந்தம் தாவா சொத்தில் ஒரு பகுதி வாடகைதாரர் என்ற முறையில் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரி. கோமளத்தம்மாள் அவரது வாரிசுகள் தாவா சொத்தை கலிபுல்லா மற்றும் அவரது மனைவிக்கு கிரயம் செய்து கொடுத்தது செல்லாது என்று சிவானந்தம் எந்தவித வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. சிவானந்தத்தின் மனைவி தனலெட்சுமி, மகன்கள்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.12 17:33:41 +0530

வேலவன், சிங்காரவேல், சுதா, கீதா ஆகியோர் உள்ளார்கள். சிவானந்தத்தின் கையெழுத்து அவரது மனைவி மகன், மகள்களுக்கு நன்கு பரிச்சயம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கிற்கு பின்னிட்டு தாவா சொத்து எந்த காலத்திலும் உரிமையிலும் அனுபவத்திலும் இருந்தது இல்லையென்றால் தவறு. சிவானந்தம் உயிருடன் இருக்கும்வரை தாவா சொத்தை பொறுத்து எவ்வித உரிமையும் கோரவில்லை என்றால் தவறு. கலிபுல்லா, சிவானந்தத்திற்கு எதிராக வழக்க சொத்தை காலி செய்ய வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரி. மன்னார்குடி வாடகை கட்டுப்பாட்டு அலுவல் நீதிமன்றத்தில் கலிபுல்லா வழக்கு தாக்கல் செய்திருந்தார். அது RCOP 41/1988 என்றால் சரி. 01.11.1994 ல் கலிபுல்லா தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரி. அதில் கோமளத்தம்மாளிடம் சிவானந்தம் வாடகைக்கு இருப்பதாக தெரிவித்து கட்சியாடப்பட்டது. பட்டுக்கோட்டை சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண் 100/1990 நிலுவையில் இருப்பதாகவும் அந்த தீர்ப்புரையில் கட்டிட உரிமையாளர் மற்றும் வாடகைதாரர் என்ற உறவுமுறை நிரூபணம் செய்யவில்லை என்ற காரணத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரி. கலிபுல்லா நாகப்பட்டினம் சார்பு நீதிமன்றத்தில் RCA 4/1995 வழக்கு தாக்கல் செய்தார், அந்த வழக்கு

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.12 17:33:47 +0530

தள்ளுபடி செய்யப்பட்டது. அ.வ.எண் 100/1990 விபரத்தை RCA 4/1995 ல் தெரிவிக்கப்பட்டது என்றால் சரி. அதன் பின்னிட்டு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் கலிபுல்லா மேல் முறையீடு செய்திருந்தார், கலிபுல்லா இறந்துவிட்டதால் அந்த வழக்கு தள்ளுபடியாகி விட்டது. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 ஆவணங்கள்படி சிவானந்தத்திற்கு எந்தவித உரிமையும் கிடையாது வாடகைதாரர் என்ற முறையில் அனுபவித்து வந்தார். சிவானந்தம் 2014 ல் இறந்து விட்டார். சிவானந்தத்தின் வாரிசுதாரர்கள் தாவா சொத்தில் எந்தவித உரிமையும் கோறவில்லை என்றால் எனக்கு உயில் எழுதி வைத்ததால் கோறவில்லை. கலிபுல்லாவிற்கு கோமளத்தம்மாள் வகையறா எழுதி கொடுத்துள்ள வா.சா.ஆ.9 கிரய சாசனம் என்றால் சரி. வா.சா.ஆ.10 கலிபுல்லா வகையறாக்கள் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரய சாசனம். 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரய சாசனம் வா.சா.ஆ.11.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.12 17:33:53 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.